[1978 மார்ச் 22

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, 1977–78-ம் நிதி ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை 1978, நவம்பர் மாதத்திற்குள் முடிவு பெற வேண்டும். 1977–78 நிதி ஆண்டு முதல் அரையாண்டின் தணிக்கை அறிக்கை தற்போது தணிக்கையாளரின் ஆய்வில் உள்ளது.

திரு. மு. அரங்கநாதன் : தலைவரவர்களே, சென்னை மாநகராட்சியில் 1977–78-ம் ஆண்டில் தணிக்கை செய்யப்பட்டிருக்கிறதா என்று மட்டும் உறுப்பினர் கேட்டு இருக்கிறார். 1973-ம் ஆண்டிற்குப் பிறகு செய்யப் பெற்றுள்ள ஒவ்வொரு ஆண்டின் தணிக்கை அறிக்கையும் இந்த அவையில் வைக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அவைகள் எல்லாம் முடிவு செய்யப்பட்டுவிட்டன. தேவைப்பட்டால் பேரவையில் வைப்பதைப் பற்றி ஆலோசிக்கலாம்.

தாராசுரம் பஞ்சாயத்து.

*664. வினா—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம், கும்பகோணம் தாலுக்கா, தாராசுரம் பஞ்சாயத்து நிர்வாக அதிகாரி பஞ்சாயத்துக் கூட்டத்தைக் கூட்ட மறுத்து வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) மேற்படி பஞ்சாயத்திற்குட்பட்ட மீன் வளர்ப்பு குளங்களை பாதுகாக்க விதிமுறைக்கு புறம்பாக தன் விருப்பத்திற்கிணங்க நபரை நியமித்தது சம்பந்தமாக அரசுக்கு ஆட்சேபங்கள் வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) பேரூராட்சித் தலைவருக்கும், நிர்வாக அதிகாரிக்கும் சுமுக உறவு இல்லாததால் இத்தகைய நிலை ஏற்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவரை மாற்றிவிட்டார்.

(ஆ) நிர்வாக அதிகாரிக்கு இதில் ஒன்றும் தொடர்பு இல்லை எனவும், மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, தலை மூளையை அரித்ததைப் போல், வேலியே பயிரை மேய்ந்தது என்று சொல்வது போல், பஞ்சாயத்து அதிகாரியே பஞ்சாயத்தைக் கூட்டவில்லை என்றால் அது சரிதானா, முறைதானா, வரும் காலத்தில் இப்படிப்பட்ட முறை இல்லாமல் தவிர்க்கப்படுமா?

காலை

1978 மார்ச் 22]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, மன்றக் கூட்டத்திற்கான பொருட் குறிப்பு பற்றி மன்றத் தலைவருக்கும், நிர்வாக அதிகாரிக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக ஆகஸ்ட், செப்டம்பர் 1977 ஆகிய இரு மாதங்களில் மன்றக் கூட்டம் கூட்டப் பெறவில்லை. எனினும் அதற்குப் பிறகு அக்டோபர், நவம்பர், டிசம்பர் 1977 ஆகிய மாதங்களில் மன்றக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. ஆகவே, வேலி பயிரை மேயவில்லை.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவரவர்களே, இந்த தாராசுரம் ஊராட்சியில் எப்போதிலிருந்து மன்றக் கூட்டங்கள் நடைபெறவில்லை? அதற்கு முன்னால் நடைபெற்றுக் கொண்டிருந்தன என்றால், பின்னால் ஊராட்சிக் கூட்டங்கள் நடைபெறாமல் போனதற்கு என்ன காரணம்? தலைவருக்கும், அந்த நிர்வாக அதிகாரிக்கும் இருந்த தொடர்பு அறுபட்டுப் போக வேண்டிய அவசியம் என்ன வந்தது? அவர்களிடையே ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடு என்ன? அங்கே பல்வேறு ஊழல்கள் நடைபெற்று இருக்கின்றன என்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, 1977ஆம் ஆண்டு பிப்ரவரி, ஏப்ரல், மே, ஆகஸ்ட், செப்டம்பர் ஆகிய மாதங்களைத் தவிர மற்ற மாதங்களில் நடைபெற்றுள்ளன. பஞ்சாயத்துத் தலைவரால் 1977ஆம் ஆண்டு பிப்ரவரி, ஏப்ரல் ஆகிய இரு மாதங்களில் மன்றக் கூட்டத்தைக் கூட்ட விண்ணப்பங்கள் செய்யப்படவில்லை. மே மாதத்தில் கூட்டப்பட்ட மன்றக் கூட்டம், உறுப்பினர் எண்ணிக்கைக் குறைவின் காரணமாகத் தள்ளிப் போடப்பட்டது. மற்றவைபற்றித் தகவல் இல்லை.

திரு. செ. இராமலிங்கம் : தலைவரவர்களே, இதுபோன்ற ஊராட்சி மன்றங்களில் தலைவர், உறுப்பினர்கள் மட்டுமல்ல; மக்கள் குழு என்ற பெயரால் நியமிக்கப்பட்ட சிலரும் இதுபோன்று நிர்வாகத்தில் தலையிடுவதால் சிக்கல்கள் ஏற்படுகின்றன என்பதை அரசு அறியுமா? அதைத் தவிர்க்க மக்கள் ஆலோசனைக் குழு கலைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, மக்கள் குழு நியமிக்கப்பட்டது இப்போதுதான்; அதாவது 1977-ஆம் ஆண்டில்தான். இதில் சிக்கல் ஒன்றும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்களின் கோரிக்கைகளை ஏற்றுதான் மக்கள் குழு அமைக்கப்பட்டது.